தென்காசி, ஆலங்குளம் விவசாயப் பொதுமக்களின் கனவுத் திட்டமாக இருந்த ஜம்புநதி மேல்மட்டக் கால்வாயை நேற்றையதினம் விதி110-ன்கீழ் ரூ42 கோடியில் அமைத்துக்கொடுத்த மாண்புமிகு இதய தெய்வம், ஏழை விவசாயிகளின் விடிவெள்ளி, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் என் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா வரிசை எண் 379, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

379—

கால்நடைக் கிளை நிலையக் கட்டடம்

***53122—திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை கிழக்கு தொகுதி, கள்ளந்திரியிலுள்ள கால்நடைக் கிளை நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலம் கால்நடை துறைக்கு பொற்காலம் என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனென்றால், ஆட்சியிலே ஆடுகள் முதல் ஆம்புலன்ஸ் வரை அனைத்தையும் அள்ளித் தந்த ஆட்சிக்காலம்தான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்காலம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதுரை கிழக்கு தொகுதி, கள்ளந்திரியிலே உள்ள கால்நடைக் கிளை நிலையத்திற்கு கட்டடம் கட்ட வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். மேற்படி கால்நடைக்

2015 செப்டம்பர் 29]

கிளை நிலையத்தை மருந்தகமாகத் தரம் உயர்த்தி கட்டடம் கட்ட, மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று, தரம் உயர்த்தித் தரப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 380, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

380—

கைத்தறி விற்பனை நிலையம்

***52486—திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை பேரவைக்கு அளிக்கிறேன்.*

எண்ணற்ற திட்டங்களை நெசவாளர் சமுதாயத்திற்கு அள்ளித்தந்து என்றென்றும் நெசவாளர்களுக்கு குலதெய்வமாக விளங்கக்கூடிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

சங்கரன்கோவில் தொகுதியிலே ஒரு கைத்தறி விற்பனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வினாவிற்கு, தற்போது அதுபோன்ற செயற்குறிப்பு எதுவும் இல்லையென்பதுதான் பதில் என்றாலும், சங்கரன்கோவில் நகராட்சியில் அரசுக்கு சொந்தமான கட்டடங்கள் ஏதுமில்லையென்றாலும் குறைந்த வாடகைக்கு கட்டடம் கிடைக்கும்பட்சத்தில், கைத்தறி விற்பனை நிலையம் அமைப்பது தொடர்பாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.